# சமூக ஊடகங்களில் சதித்திட்டத்தோடு தரம் தாழ்ந்த விமர்சனங்கள்!

## கண்ணியத்தோடு எதிர்கொண்ட திருவாரூர் மாவட்ட தி.மு.க.வினர்!

திருவாரூர்,ஏப்28.

நடைபெற்று முடிந்திருக்கும் 2026சட்டமன்ற பொது தேர்தலில், கழக பொற்கால ஆட்சியின் மீதும், திராவிட நாயகர் தமிழ்நாடு முதல்வர் மீதும் கிஞ்சிற்றும் குறைக்கான முடியாத எதிரணியினர் சமூக வலைதளங்கள் வழியாக பரப்பிய அவதூறு செய்திகளையும் , தனிமனித தாக்குதல்களையும், மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களைத்தந்த திருவாரூர் மாவட்டத்தில் , கழக தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் வழியில் மாவட்ட செயலாளர் பூண்டி. கே. கலைவானன் அவர்களின் ஆலோசனைகளின்படி கண்ணியத்தோடு எதிர்கொண்ட கழகத்தினர் சமூக ஆர்வலர்களின் பாராட்டை பெற்றுள்ளனர்.

திருவாரூர் மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் திருவாரூரில் மாவட்ட செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் அவர்களும், மன்னார்குடியில் டி.ஆர்.பி.ராஜா அவர்களும் ,நன்னிலத்தில் எஸ்.டி.பி.ஐ. கட்சியின் முகமது முபாராக் அவர்களும் , திருத்துறைப்பூண்டியில் சி.பி.ஐ. கட்சியின் க.மாரிமுத்து அவர்களும் வெற்றி வேட்பாளராக போட்டியிட்டனர்.

கடந்த ஐந்தாண்டுகளில் எதிரணியில் இருப்பவர்கள் மட்டுமல்லாமல், இந்தியா துணைப் பெருங்கண்டமே பாராட்டும் வகையில் அனைத்து தரப்பினருமே பாராட்டும் வகையில் பொற்கால ஆட்சியில், குறைசொல்லவே வழி இல்லாத நிலையில், எதிரணியில் உள்ள சமூக ஊடக செயல்பாட்டாளர்கள் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களின் மீது தனிமனித தாக்குதல்களை பொய்யாக பரப்பினார். இதனை எதிர்கொண்ட தி.மு.க. உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சமூக ஊடக செயல்பாட்டாளர்கள் மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் அவர்களின் தெளிவான ஆலோசனைகளின்படி, எதிர்தரப்பின் தரமற்ற விமர்சனங்களுக்கு செவிமடுக்காமல், அவர்களைப் போல் பொது தளத்தில் முகம் சுழிக்கும் பதிவுகளை தராமல் கழக அரசின் சாதனைகளை சொல்லி பதிலளித்தனர்.

கழக தலைவர் திராவிட நாயகர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் தன் மீது வரும் விமர்சனங்களை புறந்தள்ளி, கண்ணியமான முறையில் செய்திட்ட தேர்தல் பிரச்சார பரப்புரைகளைப்போல திருவாரூர் மாவட்டம் “இன்னா செய்தாரை ஒருத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்” என்கிற குறளின்படி கண்ணியமான முறையில் பரப்புரைகளை மேற்கொண்டது சமூக ஆர்வலர்களின் பாராட்டை பெற்றுள்ளது.



நாகை மாவட்டம் நாகை நகர தி.மு.க. சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க கோடைகால நீர் மோர் பந்தலை நாகை மாவட்டக் கழக செயலாளர் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன் திறந்து வைத்தார். உடன் மாவட்ட கழக பொருளாளர் மு.லோகநாதன், நாகை நகர கழக செயலாளர் இரா.மாரிமுத்து, மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் ஆர்.ஏ. டி. அண்ணாதுரை, ஆ.ஆர். குலோத்துங்கன், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் எஸ்.எம். ஏ.கணேசன் மற்றும் நகர கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# புதுச்சேரியில் பிரெஞ்சு பாடம் நீக்கம்; மும்மொழி கொள்கையில் இந்தி திணிப்பு!

## புதுச்சேரி மாநில எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா போராட்டம் அறிவிப்பு!



புதுச்சேரி, ஏப். 28-

புதுச்சேரி மாநில எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சிபிஎஸ்இ பள்ளிகளில் 2026-27 கல்வியாண்டு முதல், ஆறாம் வகுப்பு மாணவர்களுக்கு மூன்றாவது மொழியைக் கட்டாயமாக்கும் புதிய அறிவிப்பை ஒன்றிய அரசு CBSE வெளியிட்டுள்ளது. தேசிய கல்விக் கொள்கையின் ஒரு பகுதியாக, ‘தேசிய பாடத் திட்டக் கட்டமைப்பு 2023’-ன் பரிந்துரைகளை அமல்படுத்துவதாகக் கூறி, மாணவர்களிடையே பன்மொழித் திறனை வளர்க்கிறோம் என்ற பெயரில் மும்மொழிப் பாடத் திட்டத்தின் திணிப்பினால், ஒரு வெளிநாட்டு மொழி, இரு பிராந்திய மொழிகள் படிக்கலாம் என்று சொல்லி, ஆங்கிலத்தை மட்டும் வைத்துக் கொண்டு, பிரெஞ்சு பாடம் நீக்கப்பட்டுள்ளது. இது மாணவர்களின் கல்விச் சுமையை அதிகரிப்பதோடு, அவர்களின் இயல்பான கற்றல் முறையையும் பாதிக்கும் செயலாக அமைந்துள்ளது.

**இவ்வளவு அவசரம் ஏன்?**

இந்த திடீர் அறிவிப்பைச் செயல்படுத்த பள்ளிகளுக்கு மிகக் குறுகிய கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. சுற்றறிக்கை வெளியான ஏழு நாட்களுக்குள் அனைத்துப் பள்ளிகளும் இந்த முறையைக் கட்டாயம் அமல்படுத்த வேண்டும் என்றும், அது குறித்த விவரங்களை உடனடியாக சிபிஎஸ்இ இணையதளத்தில் பதிவேற்ற வேண்டும் என்றும் அனைத்து சிபிஎஸ்இ அங்கீகாரம் பெற்ற பள்ளிகளுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது. போதுமான தயாரிப்புகள் இன்றி, பாடம் எடுக்க புத்தகங்கள் கூட இன்றி, இவ்வளவு அவசர மாக ஒரு பெரிய மாற்றத்தைக் கொண்டுவருவது கல்வி நிறுவனங்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

**மொழி வரலாற்றை சிதைக்கும் வஞ்சச் செயல்!**

ஆறாம் வகுப்பில் மாணவர்கள் தேர்வு செய்யும் இந்த மூன்றாவது மொழி தான், பிற்காலத்தில் அவர்களின் ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளுக்கான விருப்பத் தேர்வாக அமையும் என்று சிபிஎஸ்இ வாரியம் நிபந்தனை விதித்துள்ளது. மேலும், முறையான பாடப் புத்தகங்கள் அரசு சார்பில் இன்னும் தயாராகாத நிலையில், உள்ளூரில் கிடைக்கும் புத்தகங்களைக் கொண்டே வகுப்புகளைத் தொடங்க உத்தர விடப்பட்டுள்ளது. இத்தகைய ஒரு கட்டாய நடைமுறையை சிபிஎஸ்இ இயக்குனர் டாக்டர் பிரக்யா எம். சிங் வலியுறுத்தியிருப்பது மிகுந்த கண்டனத்திற்குரியது.

இந்த அறிவிப்பு புதுச்சேரி மண்ணின் தனித்துவமான பிரெஞ்சு கலாச்சார அடையாளத்தையும் அதன் நீண்டகால மொழி வரலாற்றையும் சிதைக்கும் வஞ்சகச் செயலாகும். பிரெஞ்சு மொழியைத் தங்கள் வாழ்வியலின் ஒரு பகுதியாகக் கொண்டுள்ள புதுச்சேரி பூர்வகுடி மக்களின் உரிமையை இது நேரடியாகப் பறிக்கிறது. மேலும், பல ஆண்டுகளாக பிரெஞ்சு மொழி பயிற்றுவித்து வரும் ஆசிரியர்களின் வாழ்வா தாரத்தையும், அவர்களின் வேலை வாய்ப்பையும் இந்தத் தன்னிச்சையான முடிவு கேள்விக்குறியாக்கி யுள்ளது.

ஒன்றிய பாஜக அரசின் இந்த நடவடிக்கை நாட்டின் பன்முகத்தன்மைக்கு விடுக்கப்பட்ட சவாலாகும். குறிப்பாக, புதுச்சேரி மாநிலத்தின் மலையாளம் பேசும் மாஹே மற்றும் தெலுங்கு பேசும் ஏனாம் பகுதி மாணவர்கள் மீது அவர்களின் விருப்பத்திற்கு மாறாக இந்தி அல்லது சமஸ்கிருதத்தைக் கட்டாயமாகத் திணிப்பது மொழிச் சிறுபான்மையினரின் உரிமைகளை நசுக்கும் செயலாகும். இது மாணவர்களின் இயல்பான மொழித் திறனைப் பாதிப்பதோடு, பெற்றோர்களிடையே தேவையற்ற குழப்பத்தை யும் அச்சத்தையும் உண்டாக்கும் என அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

**உடனே திரும்ப பெறுக!**

பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துத் தந்த இருமொழிக் கொள்கையே (தமிழ் மற்றும் ஆங்கிலம்) மாணவர்களின் எதிர்காலத்திற்கும் மாநில உரிமைகளுக்கும் உண்மையான பாதுகாப்பு என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. மக்களின் விருப்பத்தைக் கேட்காமல் எடுக்கப்பட்டுள்ள இந்தத் தன்னிச்சையான முடிவை ஒன்றிய அரசு உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும். பன்முகத்தன்மையைச் சிதைக்கும் இத்தகைய எதேச்சதிகார மொழித் திணிப்பு நடவடிக்கைகளை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கல்வி துறையை கண்டித்து மிகப்பெரிய மொழி உரிமை போராட்டம் நடத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# பா.ஜ.க.வில் இணைந்த ராகவ் சத்தா எம்.பி.க்கு - ‘இன்ஸ்டா’வில் 10 லட்சம் பேர் எதிர்ப்பு!

புது டெல்லி,ஏப்.28-

ஆம் ஆத்மி கட்சியிலிருந்து விலகி பாஜகவில் இணைந்த மாநிலங்களவை எம்.பி ராகவ் சத்தா கடந்த 24 மணி நேரத்திற்குள் இன்ஸ்டாகிராமில் 10 லட்சம் ஃபாலோயர்ஸை இழந்துள்ளார்.

ஆம் ஆத்மி கட்சியின் ஆறு மாநிலங்களவை எம்.பிக்களுடன் ராகவ் சத்தா ஆம் ஆத்மி கட்சியிலிருந்து விலகி பாஜகவில் இணைந்த நிலையில், சமூக ஊடகத்தில் அவரின் செல்வாக்கு சரிந்துள்ளதாக தெரிகிறது. சில வாரங்களுக்கு முன்பு ஆம் ஆத்மி கட்சியின் ராஜ்யசபா துணைத் தலைவர் பதவியிலிருந்து ராகவ் சத்தா நீக்கப்பட்ட பிறகு, நேற்று அவர் பாஜகவில் இணைந்தார். அவரின் இந்த அரசியல் நிலைப்பாடு ஜென்ஸி தலைமுறையினரைக் கவரவில்லை என்று தெரிகிறது.

ராகவ் சத்தா பாஜகவில் இணைந்த 24 மணி நேரத்திற்குள் இன்ஸ்டாகிராமில் சுமார் பத்து லட்சம் ஃபாலோயர்களை இழந்துள்ளார். வெள்ளிக்கிழமை அன்று, இன்ஸ்டாகிராமில் ராகவ் சத்தாவிற்கு 1.46 கோடி ஃபாலோயர்கள் இருந்தனர். சனிக்கிழமை மதியம் 1 மணிக்கு, அவரது ஃபாலோயர்களின் எண்ணிக்கை 1.35 கோடியாகக் குறைந்தது.

ராகவ் சத்தாவுக்கு எதிராக இன்ஸ்டாகிராமில் ‘பின்தொடர்வதை நிறுத்து’ என ஜென் ஸி தலைமுறையினர் மேற்கொண்ட பிரச்சாரம், 24 மணி நேரத்தில் அவரின் பின் தொடர்பவர்களின் எண்ணிக்கை 10 லட்சம் குறைய வழிவகுத்துள்ளது என்று என்சிபி (எஸ்பி) செய்தித் தொடர்பாளர் அனிஷ் கவாண்டே ட்வீட் செய்துள்ளார். “இணையம் ஒரே இரவில் உங்களை ஒரு கதாநாயகனாக மாற்ற முடியும். அதே இணையம் ஒரே இரவில் உங்களை பூஜ்ஜியத்திற்கும் கொண்டு செல்ல முடியும்” என்று அவர் கூறினார்.

“unfollowRaghavChadha” என்ற ஹேஷ்டேக் சமூக ஊடகங்கள் வேகமாக பகிரப்பட்டு வருகிறது. இந்தச் சூழலில், பிரதமர் நரேந்திர மோடி மற்றும் பாஜகவை விமர்சிக்கும் தனது பழைய பதிவுகளை ராகவ் சத்தா நீக்கிவிட்டதாகவும் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## கோடம்பாக்கம் பவர் ஹவுஸ் -

# பனகல் பூங்கா ‘மெட்ரோ’ தண்டவாளப் பணிகள் ஜூலை மாதம் தொடங்கும்!

சென்னை, ஏப்.28-

சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டத் திட்டத்தின் ஒரு பகுதியாக, கோடம்பாக்கம் பவர் ஹவுஸ் முதல் பனகல் பூங்கா வரையிலான 2.9 கி.மீ தூரத்திற்கு தண்டவாளம் அமைக்கும் பணிகள் வரும் ஜூலை மாதம் தொடங்கப்பட உள்ளன.

சென்னை மாநகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் நோக்கில் நடைபெற்று வரும் மெட்ரோ இரண்டாம் கட்டப் பணிகளில், 4வது வழித்தடமான பூந்தமல்லி கலங்கரை விளக்கம் பாதையில் பணிகள் தீவிரமடைந்துள்ளன.

இதன் முக்கியப் பகுதியாக, கோடம்பாக்கம் பவர் ஹவுஸ் மற்றும் பனகல் பூங்காவை இணைக்கும் 2.9 கி.மீ தூரத்திற்கு, இருபுறமும் சேர்த்து மொத்தம் 5.8 கி.மீ நீளத்திற்கு தண்டவாளங்கள் அமைக்கப்பட உள்ளன.

இந்தத் திட்டத்தின்படி, பூந்தமல்லியில் இருந்து உயர்மட்டப் பாதையாக வரும் மெட்ரோ ரயில், பனகல் பூங்காவில் தான் முதன் முதலில் சுரங்கப்பாதைக்குள் நுழைகிறது.

இதனால் இரண்டாம் கட்டத் திட்டத்தில் பயணிகள் பயன்படுத்தப்போகும் முதல் சுரங்கப்பாதை நிலையமாக பனகல் பூங்கா அமைய உள்ளது.

தண்டவாளம் அமைக்கும் பணிகளுடன் சேர்த்து, ரயில்களுக்கு மின்சாரம் வழங்கும் மேல்நிலை மின்சாரக் கம்பிகள் அமைக்கும் பணிகளும் ஒரே நேரத்தில் மேற்கொள்ளப்பட உள்ளன. தற்போது பூந்தமல்லி போரூர் வடபழனி இடையிலான உயர்மட்டப் பாதையை முதலில் பயன்பாட்டிற்குக் கொண்டு வர இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, மார்ச் 2027க்குள் இந்தப் பாதையை பனகல் பூங்கா வரை நீட்டிக்க மெட்ரோ ரயில் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இந்த வழித்தடம் செயல்பாட்டிற்கு வரும் போது தி.நகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதி மக்கள் பெரும் பயனடைவார்கள்.

# சென்னை - பெங்களூரு இடையே ரயில் போக்குவரத்தில் மாற்றம்!

## 10க்கும் மேற்பட்ட ரயில்கள் ரத்து!

சென்னை, ஏப். 28-

பெங்களூரு கண்டோன்மென்ட் மற்றும் ஒயிட்ஃபீல்ட் ரயில் நிலையங்களில் யார்டு மறுசீரமைப்புப் பணிகள் காரணமாக, சென்னை மற்றும் பெங்களூரு இடையேயான ரயில் போக்குவரத்து சேவை மே 29ம் தேதி முதல் ஜூலை 7ம் தேதி வரையில் சில மாற்றங்கள் செய்யப்படுகிறது. இந்த காலகட்டத்தில் சென்னை பெங்களூரு மற்றும் சென்னை மைசூரு வழித்தடங்களில் இயக்கப்படும் 10க்கும் மேற்பட்ட ரயில்கள் ரத்து செய்யப் பட்டுள்ளன.

குறிப்பாக, ஜூன் 3 முதல் ஜூலை 7 வரையிலான குறிப்பிட்ட தேதிகளில் சென்னை சென்ட்ரல் அசோகபுரம் காவேரி எக்ஸ்பிரஸ் மற்றும் அதன் மறுமார்க்க ரயில், சென்னை பெங்களூரு சூப்பர்ஃபாஸ்ட் மெயில், யஷ்வந்த்பூர் சென்னை சூப்பர்ஃபாஸ்ட் எக்ஸ்பிரஸ், மைசூரு சென்னை சூப்பர்ஃபாஸ்ட் எக்ஸ்பிரஸ் மற்றும் பெங்களூரு ஜோலார்பேட்டை இடையேயான மெமு ரயில்கள் முழுமையாக ரத்து செய்யப்பட்டுள்ளன.

ஜூலை 7ம் தேதியன்று ஜோலார்பேட்டை – கே.எஸ்.ஆர் பெங்களூரு மெமு ரயில் தேவனகொந்தி வரை மட்டுமே இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ரத்து செய்யப்பட்டுள்ள ரயில்கள் தவிர, மே 29, ஜூன் 2, 7, 19, 23 மற்றும் ஜூலை 3 ஆகிய தேதிகளில் மைசூரு ரேணிகுண்டா சூப்பர்ஃபாஸ்ட் எக்ஸ்பிரஸ், எஸ்.எம்.வி.டி பெங்களூரு நியூ தின்சுகியா எக்ஸ்பிரஸ் மற்றும் ஹாட்டியா பெங்களூரு எக்ஸ்பிரஸ் உள்ளிட்ட ரயில்கள் 30 நிமிடங்கள் முதல் 3 மணி நேரம் வரை தாமதமாகப் புறப்படும் வகையில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், நீண்ட தூரம் செல்லும் பல ரயில்கள் மாற்றுப் பாதையில் திருப்பி விடப்பட்டுள்ளன. இதனால் மைசூரு ஹவுரா எக்ஸ்பிரஸ், எஸ்.எம்.வி.டி பெங்களூரு கவுகாத்தி எக்ஸ்பிரஸ், தாதர் புதுச்சேரி எக்ஸ்பிரஸ் மற்றும் எர்ணாகுளம் பெங்களூரு வந்தே பாரத் ஆகிய ரயில்கள் காட்பாடி, ஜோலார்பேட்டை, ரேணிகுண்டா, அரக்கோணம் மற்றும் பெரம்பூர் ஆகிய முக்கிய நிலையங்களுக்குச் செல்லாமல் மாற்று வழியில் இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மீன்பிடி தடைக்காலத்தைப் பயன்படுத்தி – நாகை மாவட்டத்தில்

# ஆயிரக்கணக்கான விசைப் படகுகள், வலைகள் சீரமைப்பு!

## மீனவர்கள் தீவிரம்!

நாகை, ஏப்.28-

தமிழ்நாட்டில் கடந்த 14.4.2026 நள்ளிரவு முதல் மீன் பிடி தடைக்காலம் அமலுக்கு வந்துள்ளது. அதேசமயம் குறிப்பிட்ட எல்லை வரை பைபர் படகுகள் கடலுக்கு சென்று மீன் பிடிக்க மீன்வளத் துறை அனுமதி அளித்துள்ளது. தடை காலத்தால் மாநிலம் முழுவதும் 10 லட்சம் மீனவர்கள் வேலையிழந்துள்ளனர்.

நாகை மாவட்டத்தில் 1,000 விசைப்படகுகள், தஞ்சையில் 150 விசைப்படகுகள், புதுக்கோட்டையில் 350 விசைப்படகுகள், மயிலாடுதுறையில் 250 விசைப்படகுகள், காரைக்காலில் 200 விசைப்படகுகள் கரைகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. டெல்டாவில் சுமார் 1.50 லட்சம் மீனவர்கள், 10 இலட்சம் மீன்பிடி சார்ந்த தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர். இதனால் டெல்டாவில் தினம்தோறும் ரூ.500 கோடி வர்த்தகம் பாதிக்கப்பட்டு வருகிறது.

பொதுவாகவே தடைக் காலத்தைப் பயன்படுத்தி நாகை மீனவர்கள் தங்களது விசைப்படகுகளையும், வலைகளையும் சீரமைப்பது வழக்கம். படகுகளுக்கு வர்ணம் தீட்டுதல், இன்ஜினை பழுது பார்த்தல், வலைகளை சீரமைத்தல் உள்ளிட்ட பல்வேறு சீரமைப்பு பணிகளில் மீனவர்கள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். இதுகுறித்து நாகை மாவட்ட மீனவர்கள் கூறுகையில், ‘‘விசைப்படகுகளை சீரமைக்க ரூ.5 லட்சம் முதல் ரூ.10 லட்சம் வரை செலவாகும். சில ஆண்டுகளுக்கு முன்பு வரை மீனவர்கள் வலையில் அதிக அளவிலான மீன்கள் சிக்கும். இப்போது போதிய மீன்கள் சிக்குவதில்லை.

வானிலை மாற்றம் காரணமாக பல நாட்கள் வீடுகளில் முடங்கும் நிலை ஏற்படுகிறது. இதனால் எங்களது குடும்ப வாழ்வாதாரத்தை காப்பதற்கே சிரமப்பட்டு வருகிறோம். இலட்சக்கணக்கில் செலவு செய்து விசைப்படகுகளை சீரமைப்பது சிரமம். எனவே விசைப்படகு களை சீரமைக்க தமிழக அரசு வங்கி கடன் வழங்க வேண்டும். டீசலை ஜிஎஸ்டி உச்ச வரம்புக்குள் கொண்டுவர வழிவகை செய்ய வேண்டும். மீன்பிடி தடைக்கால நிவாரணத்தை ரூ.6 ஆயிரத்தில் இருந்து ரூ.8 ஆயிரமாக மாநில அரசு உயர்த்தியுள்ளது. இந்த தொகையை மேலும் உயர்த்தி வழங்க வேண்டும்” என்றனர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக சிறுபான்மையினர் நலக்குழு துணை அமைப்பாளர் ஆலந்தூர் தீபக்கின் மனைவி ஷீபா (வயது 33) உடல் நலக் குறைவு காரணமாக நேற்று முன்தினம் இயற்கை எய்தினார். அன்னாரின் உடலுக்கு ஆலந்தூர் வடக்குப் பகுதிச் செயலாளர் பா.குணாளன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினர்.

# டெல்லியில் நூலிழையில் தப்பிய சுவிஸ் விமானம்!

## 6 பயணிகள் படுகாயம்!

புதுடெல்லி, ஏப்.28-

டெல்லியில் இருந்து சுவிட்சர்லாந் தின் சூரிச் நகருக்கு 245 பயணி களுடன் சுவிஸ் ஏர் விமானம் ஞாயிறன்று அதிகாலை புறப்பட விருந்தது. ஓடு தளத்தில் இருந்து விமானம் புறப்பட்ட போது அதன் பின்புறம் உள்ள இடது சக்கரத்தில் புகை வருவதை விமானி கவனித்தார். உடனடியாக விமானத்தை இயக்குவதை அவர் நிறுத்தினார். இதனால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது.

தகவலறிந்தவுடன் ஆம்புலன்ஸ், தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்திற்கு விரைந்தன. தீயணைப்பு வாகனங்கள் தீயை அணைத்தன. பயணிகள் அனைவரும் அவசர கால சறுக்குப் பாதைகள் வழியாக வெளியேற்றப் பட்டனர். சறுக்குப்பாதைகளைப் பயன்படுத்த முடியாதவர்களுக்கு ஏணிகளும் வழங்கப்பட்டன.

இருப்பினும், இந்த மீட்பு பணி யின்போது 6 பயணிகள் பலத்த காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் தற் போது குர்கானில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த சம்பவம் காரணமாக தில்லி விமான நிலையத்தின் ஓடுதளம் சுமார் 30 நிமிடங்கள் அவசரநிலை அறிவிக்கப்பட்டது. இதனிடையே இந்தச் சம்பவத்தை உறுதிப்படுத்திய சுவிஸ் ஏர்லைன்ஸ் நிறுவனம், ஊழியர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்பட வில்லை என்று குறிப்பிட்டுள்ளது.

ஜலந்தர் பாஜகவில் இணைந்த எம்.பி.,க்களின் வீடுகளின் முன் போராட்டம் பஞ்சாப்பில் அரசியல் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையிலும், ஆம் ஆத்மி ஆட்சியை கவிழ்க்கும் நோக்கத்திலும் ஆளும் கட்சியைச் சேர்ந்த 7 எம்.பி.,க்களை (ஆம் ஆத்மி) பாஜக தங்கள் பக்கம் இழுத்தது. கட்சி தாவிய ஏழு பேரும் துரோகிகள் என்று பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் கூறியிருந்தார். இந்நிலையில், ஆம் ஆத்மி கட்சியிலிருந்து விலகி பாஜகவில் இணைந்த மறு நாளே, அக்கட்சியின் தொண்டர்கள் சனி யன்று இரவு முதல் எம்.பி.,க்களின் வீடுகளுக்கு முன்பு போராட்டம் நடத்தி வரு கின்றனர். குறிப்பாக ஜலந்தரில் உள்ள ஹர்பஜன் சிங்கின் வீட்டிற்கு வெளியே ஆம் ஆத்மி தொண்டர்கள் தங்கள் கண் களில் கருப்புத் துணிகளைக் கட்டிக் கொண்டு, அவரது இல்லத்தின் முன் இடைவிடா போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் அவரது வீட்டின் சுவரில் கருப்பு மையால் துரோகி என்கிற வாசகத்தை என எழுதி எதிர்ப்பை வெளிப் படுத்தியுள்ளனர். இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரான ஹர்பஜன் சிங் ஏப்ரல் 2022இல் ஆம் ஆத்மி சார்பில் மாநி லங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட் டார் என்பது குறிப்பிடத்தக்கது.